12.11.2024

அ.வ.எண். 383-2017

வாசா.1 - செந்தில்குமார்

2 முதல் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

24.06.1987 தேதியில் அங்காத்தாளுக்கு விற்பனை செய்த சொத்தின் புல எண்.618/2, 623/1 ல் 1.02 ஏக்கர், மற்றும் 858/1 ல் 22.5 சென்ட் ஆக மொத்தம் 2.33 ஏக்கர் இந்த காலையில் என் தாயாரின் தகப்பனாரான ராமன கவுண்டர் எனது மாமா கருப்பசாமி, பழனிச்சாமி ஆகியோர் விற்பனை செய்துள்ளனர் என்றால் ஆமாம். அந்த ஆவணத்தின் நகல் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் ஆமாம், அது பி.வா.சாஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இரண்டு காலைகளையும் நான் வழக்கு சொத்தில் காட்டியுள்ளேனா என்றால் ஆமாம். வழக்கு சொத்து பொறுத்து என் மாமா, தாத்தா ஆகியோருக்குள் ஒரு குடும்ப ஏற்பாடு ஏற்பட்டுள்ளது என்றும், அது தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் ஆமாம் அது தவறான ஆவணம் அது அவர்கள் மூவருக்குள் மட்டும் ஏற்படுத்திக் கொண்ட ஆவணம். என் தாயார் தரப்பினர் இல்லை.

மேற்படி ஒப்பந்த பத்திரத்தில் ஏற்கனவே வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டு அதன் அடிப்படையில் அனுபவத்தில் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் அனுபவம் தற்போது யார் அனுபவத்தில் உள்ளனர் என்றால் அது கூட்டு உடைமையில் உள்ளது. அது யாருடைய கூட்டு உடைமையில் உள்ளது என்றால் அது நஞ்சப்ப கவுண்டரின் வாரிசுகளான கருப்பசாமி, பழனிச்சாமி மற்றும் தேவாத்தாள் ஆகியோரின் உடைமையில் உள்ளது. என் தாயாருக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. நான் வழக்கு சொத்திற்கு கடைசியாக எப்போது சென்றேன் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை சென்றேன். அதற்கு பின்னிட்டு அவர்கள் பரிவர்த்தனை ஏற்படுத்தியதால் வழக்கு தாக்கல் செய்து விட்டேன். அதன் பின்னிட்டு செல்லவில்லை. 1984 ல் இருந்து வழக்கு தாக்கல் செய்யும் தேதி வரை என் தாயார் பெயரில் பட்டா, சிட்டா, அடங்கல் போன்ற ஆவணங்கள் இல்லை. மேற்படி பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை ராமன கவுண்டர், பழனிச்சாமி, கருப்பசாமி பெயரில் தான் இருந்தது என்றால் ஆமாம். நான் இந்த சங்கதிகளை 1992 ம் ஆண்டே எனக்கு தெரியும் என்றால் இல்லை, 2007 ம் ஆண்டு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னிட்டு தெரிய வந்தது. நஞ்சப்ப கவுண்டரை ஒரு தரப்பினராக எதன் அடிப்படையில் இந்த வழக்கில் சேர்த்தேன் என்றால் சாமிநாதன், ரங்கசாமி, ராமன கவுண்டர் பூமியில் பட்டா மாறுதல் செய்ததால் அவர்களையும் இந்த வழக்கில் சேர்த்துள்ளேன்.

வழக்கு சொத்து பட்டா மாறுதலுக்கு பின்னிட்டு அவர்களது அனுபவத்தில் தான் உள்ளது என்றால் ஆமாம். அது சாமிநாதன், வசந்தாமணி, ரங்கசாமி, பழனிச்சாமி, கமலம் அனுபவத்தில் தற்போது உள்ளது. தற்பொழுது 2 முதல் 5 பிரதிவாதிகள் அனுபவத்தில் வழக்கு சொத்துக்கள் இல்லை என்றால் ஆமாம், பத்திரப்படி அவர்கள் பெயரில் தான் உள்ளது. ராமன கவுண்டர் வகையறா அனுபவத்தில் சொத்து உள்ளது அதை மீட்டு கொடுக்க நாங்கள் பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. ராமன கவுண்டரின் வகையறாக்கள் எப்போதிலிருந்து சொத்தில் அனுபவத்தில் உள்ளார்கள் என்று எனக்கு வழக்கு தாக்கல் செய்ததிலிருந்து தெரியும். வா.சா.ஆ.2 அறிவிப்பில் நான் வழக்கறிஞர் அனுப்பும்போது ரங்கசாமி, சாமிநாதன், வசந்தாமணி, கமலம் ஆகியோர்கள் பெயரில் அனுபவம் உள்ளது என்று அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் ஆமாம். அதேபோல் 1 முதல் 9 பிரதிவாதிகள் கையில் தான் வழக்கு சொத்து இருப்பதாக சொல்லி இருந்தேன் என்றால் ஆமாம்.

என் தாயாருக்கு திருமணம் ஆன பின்னிட்டு அவர் என் தகப்பனார் குடும்பத்துடன் சென்று விட்டார் என்றால் ஆமாம். அதற்கு பின்னிட்டு என் தகப்பனார் வீட்டில் தான் நாங்கள் வசித்து வந்தோம் என்றால் ஆமாம். நஞ்சப்ப கவுண்டரின் வாரிசுகளுக்கு வந்த 1934 பாகப்பிரிவினை படி உள்ள சொத்தை தற்போது யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அவர்களது கூட்டு குடும்ப அனுபவத்தில் தான் உள்ளது. அதேபோல் ராமன கவுண்டருக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்துக்களும் யார் அனுபவத்தில் உள்ளது என்றால் அது 16 முதல் 19 ம் பிரதிவாதிகள் கையில் உள்ளது. நான் ராமன கவுண்டரின் சொத்தில் தான் பாகப்பிரிவினை தற்போது கேட்டுள்ளேன். தற்போது 1 முதல் 5 பிரதிவாதிகள் வசம் ராமன கவுண்டரின் பாகப்பிரிவினையில் வந்த சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல. நான் சரியான சொத்து விவரத்தை வழக்கில் சொல்லாமலும், சரியான பரிகாரத்தை கேட்காமலும் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே வழக்கு சொத்தில் ராதாமணி, பழனிச்சாமி, ரகுபதி ஆகியோர்களுக்கு 18.07.2007 மற்றும் 05.02.2007 ஆகிய தேதிகளில் விற்பனை செய்துள்ளார்கள் என்றால் ஆமாம். என்னுடைய வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

என் தாயார் இறந்த பின்னிட்டு 2007 வரை என் தகப்பனாரோ நானோ வழக்கு சொத்தில் பாகப்பிரிவினை கேட்டு அறிவிப்பு எதுவும் அனுப்பபில்லை என்றால் ஆமாம். என் தகப்பனார் 1997 ல் இறந்துவிட்டார். என் தகப்பனார் உயிருடன் இருந்த வரை அவர் பாகம் கேட்டு எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை. எனக்கு சொத்தில் உரிமை

உள்ளது பற்றி 2007 ம் ஆண்டு தெரிந்துகொண்டேன். 1985 ல் என் தாயார் இறந்துவிட்டதாலும், 1987 ல் வழக்கு சொத்துக்கள் பொறுத்து பிரதிவாதிகளுக்குள் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டு அவரவர் தனித்தனி உடைமையில் சொத்துக்களை அனுபவம் செய்து வந்ததாலும், என்னுடைய பாகப்பிரிவினை உரிமை நீண்டகாலத்திற்கு பின்னிட்டு கேட்கபட்டுள்ளதால் நாங்கள் உடைமை நீக்கம் செய்யப்பட்டுவிட்டோம் என்றால் சரியல்ல.

மேலும் குறுக்குவிசாரணைக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/செந்தில்குமார்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur